www.Padasalai.Net www.Trbtnpsc.Com

V12H

விருதுநகர் மாவட்டம்
அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2023

வகுப்பு 12
வரலாறு

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 20×1=20

1) இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855

2) முதலாவது பயணிகள் இரயில் 1853இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
அ) மதராஸ் - அரக்கோணம்
ஆ) பம்பாய் - பூனா
இ) கொல்கத்தா - ஹூக்ளி
ஈ) பம்பாய் - தானே

3) இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியர்
அ) சுபாஷ் சந்திர போஸ் ஆ) காந்தியடிகள்
இ) A.O.ஹியூம் ஈ) பால கங்காதர திலகர்

4) "How India wrought for freedom" என்ற புத்தகத்தின் ஆசிரியர்
அ) லாலா லஜபதிராய் ஆ) அன்னிபெசன்ட்
இ) C.R.தாஸ் ஈ) திலகர்

5) காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?
அ) 1917 ஆ) 1915 இ) 1918 ஈ) 1916

6) கூற்று : வ.உ. சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்
காரணம் : இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்
அ) கூற்று, காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று காரணம் சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று தவறு காரணம் சரி

7) 1923-இல் மோதிலால் நேரு மற்றும் சி.ஆர்.தாஸ் ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன?
அ) சுதந்திர கட்சி ஆ) சுயராஜ்ய கட்சி இ) கம்யூனிட்ஸ் கட்சி ஈ) கதார் கட்சி

8) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1930 ஆ) 1920 இ) 1935 ஈ) 1925

9) பனாரஸ் இந்துப்பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?
அ) திலகர் ஆ) மகாத்மா காந்தியடிகள்
இ) பி.பி.வாடியா ஈ) மதன்மோகன் மாளவியா

10) கல்பனாதத் எதனுடன் தொடர்புடையவர்?
அ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேசன்
ஆ) வங்காள சபை
இ) இந்தியக் குடியரசு இராணுவம்
ஈ) இவற்றில் எதுவுமில்லை

11) பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

| பட்டியல் I | | | பட்டியல் II |
|---|---|---|---|
| அ) அன்னிபெசன்ட் | - | 1. | அலிகார் இயக்கம் |
| ஆ) சையது அகமது கான் | - | 2. | தயானந்த சரஸ்வதி |
| இ) கிலாபத் இயக்கம் | - | 3. | பிரம்ம ஞான சபை |
| ஈ) சுத்தி இயக்கம் | - | 4. | அலிசகோதரர்கள் |

அ) 3 1 4 2 ஆ) 1 2 3 4 இ) 4 3 2 1 ஈ) 2 3 4 1

12) மகாத்மா காந்தியடிகளின் 'செய் அல்லது செத்து மடி' என எந்த நிகழ்வின் போது அழைப்புவிடுத்தார்?
அ) சட்டமறுப்பு இயக்கம் ஆ) ஒத்துழையாமை இயக்கம்
இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ) இவை அனைத்தும்

13) மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

14) பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்
அ) ராம்மனோகர் லோகியா ஆ) ஜெயபிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர் லால் பகுகுணா

15) மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள்
அ) ஜனவரி 30, 1948 ஆ) ஆகஸ்ட் 15, 1947
இ) ஜனவரி 30, 1949 ஈ) அக்டோபர் 2, 1948

16) தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?
அ) திலகர் ஆ) அன்னிபெசண்ட் இ) பி.பி.வாடியா ஈ) எச்.எஸ்.ஆல்காட்

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



17) நவீன செயல்முறை அறிவியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?
அ) அரிஸ்டாட்டில் ஆ) பிளாட்டோ
இ) ரோஜர் பேக்கன் ஈ) லாண்டாஸ் டெய்ணா

18) நியூ ஆம்ஸ்டர்டாமிற்கு .......... என மறுபெயர் சூட்டப்பட்டது.
அ) வாஷிங்டன் ஆ) நியூயார்க் இ) சிக்காகோ ஈ) ஆம்ஸ்டர்டாம்

19) பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு .......... ல் நடைபெற்றது.
அ) 1775 ஆ) 1773 இ) 1784 ஈ) 1799

20) சூயஸ் கால்வாய் செங்கடலை .......... கடலுடன் இணைக்கிறது.
அ) ஏடன் வளைகுடாவுடன் ஆ) காம்பே வளைகுடாவுடன்
இ) மத்திய தரைக்கடலுடன் ஈ) அரபிக்கடலுடன்

## பகுதி - II

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (வினா எண்: 30 கட்டாய வினா) 7×2=14

21) தேசியம் என்றால் என்ன?
22) அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.
23) மிதவாத தேசியவாதிகளின் 'இறைஞ்சுதல் கொள்கை என்றால் என்ன?
24) அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கையின் பெயர்களைக் கூறுக.
25) தொடக்க கால முக்கிய தேசியவாதிகளைக் கண்டறிக.
26) பசுமைப் புரட்சி என்றால் என்ன?
27) பாஸ்டன் படுகொலை பற்றி நீங்கள் அறிந்ததென்ன?
28) பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளை விவாதிக்கவும்.
29) முதல் உலகப் போரில் பங்கு பெற்ற மைய நாடுகளின் பெயர்களை எழுதுக.
30) 'ரூசோ' - பற்றிக் குறிப்பு வரைக.

## பகுதி - III

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (வினா எண்: 40 கட்டாய வினா) 7×3=21

31) மெக்காலேயின் 'இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை ஆய்க.
32) வ.உ. சிதம்பிரத்தின் சுதேச இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.
33) தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி எழுதுக.
34) ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு வரைக.
35) சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியா சென் எவ்வாறு திட்டமிட்டார்?
36) கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
37) இந்திய அரசியலமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
38) மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?
39) நேட்டோ உருவாக்கப்பட்டதின் பின்னணியைக் கண்டறியும்.
40) இரண்டாம் உலகபோரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 7×5=35

41) அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஆய்க. (அல்லது)
ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.

42) அ) இராஜாஜி திட்டம் பற்றி எழுதுக. (அல்லது)
ஆ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.

43) அ) முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக. (அல்லது)
ஆ) மலபார் மாப்பிள்ளை கிளர்ச்சியின் காரணங்கள் மற்றும் துயர விளைவுகளைப் பற்றி விவாதிக்கவும்

44) அ) இந்திய விடுதலைப்போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக. (அல்லது)
ஆ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரிக்கவும்.

45) அ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள் அதன் போக்கு, விளைவுகள் குறித்து எழுதுக. (அல்லது)
ஆ) தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?

46) அ) முதல் உலகப் போருக்கான காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக (அல்லது)
ஆ) இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும். i) சௌரி சௌரா ii) கொல்கத்தா iii) டில்லி iv) வேதாரண்யம் v) தண்டி

47) அ) இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிற்கு காரணமானவர்கள் என்பதனை ஆய்ந்து கூறுக. (அல்லது)
ஆ) கி.பி.1920 முதல் கி.பி. 1950 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்ச்சிகளை காலக்கோடுவரைந்து காட்டுக.

- - - - - - -

CamScanner

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com